<u>பொள்ளாச்சி நகராட்சி</u>

<u>சிறப்புக் கூட்டம்</u>

**31.05.2023 தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தை தொடர்ந்து நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட டவுன் சர்வே வார்டு எண் – H, பிளாக் எண் – 1, நகரளவு எண் – 2/8, 7395 சதுர மீட்டர் (1.82 ¾ ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் 1.திருமதி G.இந்துமதி, க/பெ.V.கோபாலகிருஷ்ணன், மற்றும் மூவர் என்பவர்கள் கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்திற்கு 16.02.2022 ஆம் தேதி இணைய தளத்தின் வழியாக விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். விண்ணபத்தின் அடிப்படையில் அவ்விடத்தினை கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்கள் நேரடி ஆய்வு செய்து மனைப்பிரிவுக்கான சாலைகள் மற்றும் பொது உபயோகம் வடிவமைப்பு வரைபடம் அவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1488/2022/கோ.மா, நாள்.13.04.2022–ன்படி தான சாசனத்தின் மூலம் சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களினை ஒப்படைப்பு செய்ய சார் பதிவாளர் அலுவலகம், பொள்ளாச்சி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு தானசாசனம் பத்திரம் எண்.7734/2022, நாள்.24.06.2022 பொள்ளாச்சி ஆணையாளரின் பெயரில் வரைபடத்தில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்கள், TANGEDCO–க்கு ஒதுக்கப்பட்ட பொது உபயோக இடங்களையும் தானசாசனம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்து அதன் பத்திரம் பிரதி நகராட்சிக்கு கொடுத்துள்ளார். அதன் அசல் பிரதி கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களிடம் சமர்ப்பித்து குடியிருப்பு மனைகளாக பிரித்து வரைபடத்திற்கு தொழில்நுட்ப அனுமதி எண்.ம.வ/கோ.மா.எண்.37/2023, நாள்.17.02.2023 ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் ஆறு மின்கம்பங்களுடன் சேர்ந்து (20 Waltz LED) பல்புகள் பொருத்தப்பட்டுள்ளது. அதற்கு இடத்தின் உரிமையாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட் அசல் ரசீது எண்.PGNSB115808059, நாள்.27.04.2023, ரூபாய்.1,07,333/– செலுத்தியுள்ளார். சாலைகள், சிறுபாலங்கள், குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் மழைநீர் வடிகால் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளதாக 29.05.2023–ம் | **தீர்மானம் எண்.593**<br>**1. அனுமதிக்கப்பட்டது**<br>**2. வார்டு எண் 1, 8, 19, 35 (து.தலைவர்), 36 ஆகிய நகர்மன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்தனர்.** |

| | | |
|---|---|---|
| | தேதியில் நகராட்சி பொறியாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.50977/2008/டிபி3, நாள்.05.02.2021 சுற்றறிக்கையில் பத்தி எண் 5, பொது உபயோக திறந்த வெளி இடங்களுக்கு முள்வேலி கம்பி அமைத்தும் மனைப்பிரிவு ஒப்புதலுக்கான இதர கட்டணங்களையும், கட்ட கேட்பு அறிவிப்பு இடத்தின் உரிமையாளருக்கு அனுப்பி வைக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்தி எண் 7, மேற்காணும் பணிகளை மூன்றாம் நபர் (அருகே உள்ள பொறியியல் கல்லூரி) வாயிலாக ஆய்வு மேற்கொண்டு இடத்தின் உரிமையாளர் அறிக்கை பெற்று தர வேண்டும். பத்தி எண் 10 பராமரிப்பு பணிகளுக்கான திரும்ப செலுத்தக் கூடிய வைப்புத் தொகையான ரூ.1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்), ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு என கணக்கிட்டு வாங்க தெரிவித்துள்ளதின் அடிப்படையில் மேற்கண்ட நிபந்தனைகளுக்கும் நகர ஊரமைப்புத்துறை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.1488/2022, கோ.மா, நாள்.17.02.2023–ல் தெரிவிக்கப்படுள்ள சிறப்பு நிபந்தனைகளுக்கும் உட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவில் வரும் சாலைகள், பொது உபயோக இடங்கள் மற்றும் தெரு விளக்குகள் நகராட்சி பராமரிப்பில் ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1384/2023/ஜி1. | |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**